47

அற்புதானந்த
பார்ஸி ஹிந்துஸ்தான்
பஜனைக் கீர்த்தனை

விலை அணா 4

926:417
N17
122822
(2)

உ

முருகன் துணை.

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள்பேரில்
நூதனஹிந்துஸ்தான் பார்ஸி வர்னமேட்டுகள் அடங்கிய
கீர்த்தனைகளும், முக்கியமான திருப்புகழ் பாட்டுக
ளும், தனி இந்துஸ்தான் பாட்டுகளும்
அடங்கிய

அற்புதானந்த

பார்ஸி ஹிந்துஸ்தான்

பஜனை கீர்த்தனைகள்.

இத்துடன் சில வித்வசிரோன்மணிகளால்
இயற்றிய
விநாயகர் பதிகமும், தண்டபாணி சந்தப்பத்தும் முருகன்
திருப்புகழும் அற்புதமான கீர்த்தனைகளும்
அடங்கியுள்ளன

ஜி. எம். மீனாட்சிசுந்தரமுதலியார்
அவர்களால்

மதுரை சூரியோதயம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1917.

ரிஜிஸ்டர் காபி ரைட்.

இதன் விலை] [அணா - 2.

உ

முருகன் துணை.

ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள்பேரில்

பார்ஸி ஹிந்துஸ்தான், கஜல், டோமரி, தில்லாஹு, கேல்தாத்ரு டப்பா, பஞ்சாபி, டேகா, பதிகம், சந்தப்பத்து திருப்புகழ் முதலிய வர்னமேட்டுகளடங்கிய

அற்புதானந்த

பார்ஸி ஹிந்துஸ் தான் பஜனை கீர்த்தனை

வெண்பா.

திருமாதெழில்பரவு சீதவரைமீதுவளர்
கிருபாகரமுருகன் கீர்த்தனையை—மறவாமற்
சாற்றவருளேபுரியுஞ் சங்கரனார்தாமீன்ற
ஆற்றல் மாதவாரண முகா.

விநாயகர் துதி.

பொன்னுர் மேனியனே என்ற வர்னமேட்டு.

போற்றி நின்னடியைத் தொண்டு பூண்டிடா திவ்வுலகில்
தோற்றி மாண்டவர்கள் தொகை சொல்லி முடிந்திடுமோ
நீற்றி னுண்மை நிலை சைவநேச மகிமை யெலாந்
தேற்றி யாண்டருள்வாய் திருச்செல்வ விநாயகனே. 1

வஞ்சப் பொய் களவு கெடு மார்க்கமெலாம் பயிலும்
நெஞ்சம் நின்னடியைத் தினம் நேசித்தின் புற்றிடுமோ
கொஞ்ச மேழை யென்மே லன்புகொண்டு கருணைசெய்து
செஞ்சொல் தந்தருள்வாய் திருச்செல்வ விநாயகனே. 2

கோவைபோலி தழுங் கருங் கூந்தலுங் கொண்டுவரும்
பாவைமார் மயலாலிந்தப் பாரி லலைந்துழலும்
நோவை நீக்கி யன்பா யென்னை நோக்கி மகிழ்வுகொண்டு
சேவை தந்தருள்வாய் திருச்செல்வ விநாயகனே. 3

ஹா ஹா இவராரோ என்றவர்ணமெட்டு.

இராகம் - பார்வி - தாளம் - ஆதி.

பல்லவி.

வா வா வா மத வாரணமுகனே மர
வாமலேயுனது கழல் தா தா தா (வா)

அநுபல்லவி

தேவாசெழுங்கனி யப்பமுந்தானே
தினமருந்தியே திகழ் ஆகுவாகனே
சீரார் குமரன்
சீரார் குமரன்
தேடுமுதல்வோனே யருள் செய் செய் செய் (வா)

சரணங்கள்.

பொன்மயக்கிரிபெற்ற புதல்வியின் பாலா
புனிதனே ஓம்பிர ணவமய சீலா
புலவோர்க் குதவும்
புலவோர்க் குதவும்
போதனே மிகவு மன்பு கூர் கூர் கூர் (வா)

வாசமலியுங் குழல் வல்லபைநாதா
மருப்பொடித்துப் பொருப்பில்வைத்தவிநோதா
வரமே தரவே
வரமே தரவே
மால் மருமகனே மதியிற் சேர் சேர் சேர் (வா)

தொண்டனழகர்சாமி சொல்லுமித் தமிழே
சுகமுறக்கேட்டக மகிழும்மெய்ப்பொருளே
தொழுதே னுனையே
தொழுதே னுனையே
தொல்வினையகலவே கண் பார் பார் பார் (வா)

காதாவுமதிரு பாதார விந்தமேன்ற வர்னமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

காவாகஜமுகனே ஜெகநாதா
கனவிலுமுனைமறவே னருள் தாதா

அநுபல்லவி.

தேவாதிதேவர்	தெரிசிக்கும்பாதா
சிறியேன் மீதினி	லின்னமும் வாரா
தேசிகாமூஷிக	மீதினிலேறியே
சேவைதரவேதருணஞ்	சேவைதரவேதருணம் (கா)

சரணங்கள்.

சத்திசிவமகிழ்ந்	தருளியதேவா
சண்முகன்றுதிசொல்ல	நன்னயமுடன்வா
பத்தியாயுந்தனை	நித்தமும் போற்றினேன்
பக்ஷம்வைப்பா யித்ததி	பக்ஷம்வைப்பாயித்ததி (கா)
மாசிலாத வல்லபை	யொருபாகா
தாசன்கொற்றுளன்	செந்தமிழ்கருள்யோகா
மாமரைமலனே	தாமரைத்தாளனே
வன்மஞ்செய்வதாகாதினி	வன்மஞ்செய்வதாகாதினி (கா)

சரஸ்வதி துதி.

வருவாய் சண்முகனே என்றவர்னமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்.

பல்லவி.

அன்னை	பாரதியே
அருள்செய்	திடுவாய்நீயே (அன்)

அநுபல்லவி.

நன்னய	மாகவேதான்
நாவில்	வளரும் நாயகி
மன்னு	மன்பர்தாயகி
வருவா	யன்மீதேகி (அன்)

சரணங்கள்.

வெண்மை	மிகுமுண்டக
மீதினுரைந்த	விண்மீனே
உண்மையாக	வேதானே
உதவுந்துதி	செய்தேனே (அன்)
தேடும்நான்	மறைக்கெட்டா
திவ்யசின்	மயரூபமே
நீடும்பிர	தாபமே
நித்ய	ஞானதீபமே

நேயனழகர் சாமி
நிகழ்த்துந் தண்டமிழ்வாணியே
தூயமலர் வேணியே
சுதியா ழிசைபாணியே (அன்)

சிவ ஸ்து தி.

ஜப்தகலந்தரு என்ற ஹிந்துஸ்தான் வர்னமேட்டு.

சந்திரசடாதர சம்போ சங்கரனே
தமியனை யாண்டருள் புரிவாயே
சந்ததம் யானுந்தன் பாதமே பணிந்தேன்
நந்தியின் மீதேறி வருவாயே உயர்
சத்தியையோர்பாகமதில் வைத்திடுந்தேவா மிக
நத்தினேனென்னை யன்புடனித்ததிகாவா சற்று
நீயேதயைபுரிவா யிச்சிறியன்
தமிழ்க்கினியவா யெனைச்
சண்டனணுகாமலுன்னை அண்டினேன் காரும்தேவா (சந்)

அம்பாள் மதுரை மீனாட்சி என்ற வர்னமேட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

ஜெக நாதாயென் மீதின்னம் வாதா வுனை
நம்பினேனருள் தாதா விநோதா
நதிமதிச் சடை நீதா
நடனமிடும் பாதா நட நட ஜெக (நா)

சதுர் வேதவேதாந்த முதலோனே தினம்
வேண்டிப்பணிந்தே நானே சிமானே
விறைவுட னுனைத்தானே
விடைமேலமர் கோனே விடை விடை ஜெக (நா)

திருச் சீதரனுமயனுங் காணு நின்
சேவடிதனைப் பேணு திருந்தேன்
சிறியனுன் மிகவீணாய்
திகழ்பலவாணு திக திக ஜெக (நா)

நின் பக்தன் பாலன் றமிழ்ப்பாடி நித்தம்
பஜனையில் மனங்கூடிக் கொண்டாடி
பரிவுடனுனை நாடிப்
பணிந்தேன் மலர்சூடி பணி பணி ஜெக (நா)

பார்வதி துதி.

ஆயிஷதமணி என்ற வர்னமேட்டு.

ஓரடிக் கண்ணிகள்.

தேவிமனோன்மணி திரிபுரைபர
திரிசூலி நீலி திருவருள் புரிவாய்
சிம்மமீ தேறியமருங்கவுரி
சிவனொடுநட மாடிடும் வீரி
சீலி பாலி யாரணி நாரணி

சீதரன் சோதரி யாதரியம்பிகையே
தீரிநாரிட செஞ்சரண
நிரஞ்சணிகரு மஞ்சனன
மருஞ்சுகமிரு ரஞ்சிதமொளி
ருஞ்செலியுனை யஞ்சலி புரிந்தேன்

வாலைசவுந்தர வல்லிமகமாயி
மாரிவராகி மகிடாசூரசம்மாரி
வர்மமே னம்மாகருணைவாரி
மலைமகளே மாதங்கி ஓங்காரி
மதிநதி சூடியோன் கூடிடும்

வர்மியழகிதிரு சாமிதுகிரக்ஷகி
மாட்சிசூட்சி மங்குலைநிக
ருங்குழலுறு சங்கரியுல
கெங்கினும் புகழ் பொங்குமுரசு
கங்கணியித யங்கனிந்துதவும் (தே)

தண்ட பாணி மீது சந்தப் பத்து.

தத்த தத்த தத்த தத்த தந்த தான தானன

புத்தி கெட்டு மட்கலுற்ற போதுவந்து நேரினே
நித்தி யத்தி னட்படுக்க நீயியம்பு ஞானமே
முத்தி பெற்றி ருக்க வைக்கு மோனவின்ப மீயுமோர்
பத்தி யைத்த ரற்கு ரித்து பாலதண்டபாணியே. 1

தந்த தந்த தந்த தந்த தான தந்த தானன

தண்டு கொண்ட வண்டணிங்கு தாவிவந்து மேதிமே
லண்டுகின்ற துன்பமுன்ற னுலகன் அவாழவிணை
தொண்டிணங்கு மன்ப ரன்ப சூரனெஞ்சு கீறிய
பண்டு சண்டை வென்று நின்ற பாலதண்டபாணியே. 2

தான தான தான தான தானதந்த தானனா

ஆவலாதி யானதாலி வாகம் வந்த தாகுமா
ஞேவலாது பூமிமீது நாறுகொண்டு வாழ்வதா
ரேவலாளர் கூடிலாப மேதிருன்றின் மேவுவார்
பாவைமீதி லாசையான பாலதண்டபாணியே 3

தனன தய்ய தனன தய்ய தானதத்த தானனா

கலவி செய்ய வுரிய பொய்யர் காதல்கொண்டு நாளுநா
னலையுமையல் விலகி நல்ல வோர்மை கண்டு வாழ்வனோ
வலுவில்வெய்யசிலனின்மெல்ல வாதுகொண்டுபாடியோய்
மலிகொள் கையர் செவியில் விள்ளு பாலதண்டபாணியே. 4

தன்ன தான தன்ன தான தான தந்த தானனா .

அன்ன மீது துன்ன லுற்ற வாசை யொன்று மேலுமே
சொன்ன மேவ வெண்ண மிக்க சோக மொன்று சேருமா
லென்ன வாறு நன்மை பெற்று மேழையிங்கு வாழ்வதே
பன்னும் வேத முன்னு நித்ய பால தண்ட பாணியே. 5

தான தந்த தான தந்த தான தந்த தானனா

கோடு தங்கும் வீட தென்று கோரியென்றும் வாழுவோய்
சாடு கின்ற யாட தொன்று தாழ நின்று லாவுவோய்
சூடு தொங்கன் மாக டம்பு தோளி லங்க நேருவோய்
பாடுமன்பர் நாடி நின்ற பால தண்ட பாணியே. 6

திருமால் துதி.

நடராஜா என்ற வர்னமெட்டு.

பல்லவி.

ஜெகதீசா ஸ்ரீஹரி ஜெகதீசா-மஹா
தீரவீரக்ரு ஷ்ணகரகிரிதர (ஜெக)

அநுபல்லவி.

சகலசமயமுத லெதிலுந்தனியிலாதவா
சுகமருளவா மகரவுருவா
யெனையுமறவா திதுதருணம்

தவமகிமையி லுயருபயசரணகதி
தருவாய்ஜானகி மணம்புரி தனுஸை வளைத்த (ஜெக)

சரணங்கள்.

மா கடமுடையமா மருப்பொசித்தமா தீரனேவர்ம
மா மசதந்தரமா தசகந்தரன்
மதிகிதறிடதே யித்தநியினிச்சிதைபுரி
வனஸரயணுவட மலையினிடந்துயிலுஞ் (ஜெக)

தா தளிதுளபத்தா ரணியுமுததாயணைபுயகத்
தாய் திரிகரத்தா திகழவேநிற்
தனமதுநடுதர வினிமலர்பதமுயர்
திருமகளுடனுயர் தருமாதரை நேசித்த (ஜெக)

நீ ரவிகுலனும் நீ நிரைசுகுணநீநெறிமறையு
நீ நிராமயமும் நீ யெனவிளங்கும்
நினையனுதின மனதினில்மிகத்துதிக்குமுன்
தனையனன்பன் தனையகலாதுகாக்கும் (ஜெக)

சுப்பிரமணியர் துதி.

அச்சாமோரி என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பச்சைமயில்மீதேறி இச்சமயம் வாருமே

அநுபல்லவி.

வாருமே வரந்தாருமே (பச்)

சரணங்கள்.

கண்பாரிவ்வேளை கந்தா செவ்வேளே—தேவா
கதிநீயே ததிதானே துதிசெய்தேனே (பச்)

தொண்ட ரென்னுளுந்தொழுந் தூயாமாவூற்றில்வளர்
சுகந்தா குகநாதா எனைநாடியே (பச்)

கொற்றுளனுன்னை நத்தினேனென்மேற் சிவ
குருவேநீ கிருபைகூர்ந்தருள் செய்யவே (பச்)

ஜப்தகலந்தரு என்ற வர்ண மெட்டு.

தாளம் - ஆதி.

சுந்தரமிகுந்திடுங் கந்தனேவுனைத்தினம்
வந்தனஞ்செய்தேனென்முன் வருவாயே

சுந்தரியருள்சுதா யெந்தனையாட்கொண்டுன்
தூயமலர்ப்பதமே தருவாயே எழில்

தோகை சேர்ந்திலங்கும்பொன்
மயூரவாகனா மிக
வாகுயர் தெய்வானை வள்ளி
மருவுமோகனா
சோதிக்காதே தொழுதேனுனையே
வாதிக்காமற் காப்பாற்றுமெனையே தினந்
தொண்டன் சிறு பாலன் பணி
மாவூற்றில்மேவிய தேவா ... (சுந்)

அம்பாள் மதுரை மீனாட்சி என்ற வர்னமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

என தையாவடிவேல் முருகோனே வுன
தடிமலரினைத் தானே நினைத்தே
அனுதினம் பணிந் தேனே
அருள்புரி சீமானே அருள் அருள் (என)

மா பையரவமணிந்தோன் சேயே-நீ
பாரிலெனக்குத் துணையே
பக்ஷம்வைத்திதகிகாப்பாயே
பதம் அருளு சீமானே அருள் அருள் (என)

நீ பெற்றபிள்ளையின்மேல் வாது
பெருமானே செய்வ தேது
பிழைசெய்திருந்தாலும் பொருத்திப்போது
பிரியம் வை தப்பாது பிரியம் பிரியம் (என)

வுயர் பக்தர்சூழு மாவூற்றில் வாசா
பாலன்சிறியன் தமிட்கு நேசா
பக்திசெய்தே னித்தினம்வா யீசா
பரம கும ரேசா பரம பரம (என)

நூறுதர மாறி மாறி என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

சீர்மிகுமேஷமாசமாந் தேதிமுதல்தன்னிலிந்தப்
பாரினிலெல்லோருமொன்று கூடியே வேலன்
பாங்குட னமர்மாவூத்து தேடியே

தார்புனேவேலாயுதாநற் சண்முகசடாட்சராவென்
றேரொருவருமுரைக்குங் கீதமே—கேட்கும்
வாரணன் பதியினுஞ் சதாவுமே

பக்தர்களனைவருக்குஞ் சொற்பனத்திற்போயுறைத்த
பக்குவப்படியே பரிகாரமே—செய்தே
பக்தியுடனேதொழுதன் னேரமே

அக்கரையாய்க்காவடியில் சற்கரைபால் மச்சமதை
அன்புடனே கட்டிவெகு வாகவே—ஜெக
தம்பிகைபுதல்வனைப்போய்க்காணவே

சேவடிதனைத்துதித்தே காவடியைத்தோளில்வைத்தோ
ராயிரம்பேருக்கதிக மாகுமே—அரு
ளாடிடுமகிமை சொல்லப்போகுமா

சுந்தரஞ்சேர் சன்னதிமுன் வந்தவரெல்லாங்களிக்க
விந்தையுள்ள சோதனைகள் காட்டினர்—பாச
பந்தவினை வந்தணுகா தோட்டினர்

இந்திரன்துயர்தவிர்த்த யெந்தைபிரான் தன்பெருமை
எந்தனுலெடுத்துரைக்கக் கூடுமா—வுயர்
கந்தன்பத மன்றிமனம் நாடுமா

சந்ததமுஞ்சொந்தமாய் மைந்தன் சிறுவனுரைக்குஞ்
செந்தமிழ்க்குகந்தருளுஞ் சிலனை—இனி
யெந்தனேரமும் மறவேன் வேலனை

பேகி ஆவலபாவல என்ற வர்னமெட்டு.

இராகம் - பார்வி தாளம் - ஆதி.

கண்ணிகள்.

தயைபாராய் சிவசண்முகநா தா - வுனைத்
தானே நம்பு மேழைமேல்வா தா
சத்குண பூரண
ஜகமகி மாரண
சமையமிக்தே வந்தாள் காரண இனித்
தாமதிக்காது கண்பாரும்-ஹே
சம்போமெஞ் ஞானசம்பந்தனே (தயை)

கதிர் வேலா நீ வா வா யிப்போதே-சிருங்
காரமயூரமீ தேரியே

கங்கை குமாரனே
காருமொய் யாரனே
கண்ணுபிரான் றன் மருகோனே-சூரர்
காலா நின் பாலனழகிரு-சாமி
கண்டுதொழுக திவ்யபாதனே (தயை)

படுவோகூந்தன என்ற வர்னமெட்டு.

இராகம்-பார்வி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சரணுகதிநீயே தண்டபாணியே
சரணுகதிநீயே

ஜகமாய்கைக்கடலினைத் தாண்டவே நல்வரந்
தருவாய் நீ கதியே (சர)

நித்தமும் நின்மீதிலே பக்தியே புரிந்திடச்
சித்தந்தனி விருப்பாய்-அதி
நேருடன் துதி கூறுமென்றன்முன்
நிசதரிசனே கொடுப்பாய் (சர)

சஞ்சலம்விளைத்திடும் பஞ்சபூதியங்களை
மிஞ்சிடா தொன்றுக்கு-அழகர்
சாமிதண்டமிழ் நேமிமீதினிற்
தழைத்திட வுண்டாக்கு (சர)

பையல்மாரன் என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

சுந்தமயூரமேரி வந்தருள்செய்வேலனே
இந்தனந்தனைசசுமந்தீ அந்திவண்ணன்பாலனே (சுந்)

நீலிதாடகைசுவாகு வாலியும்லங்கேசனே
ஓலமோங்கக்கொன்றமாலின் மருகாசெந்தூர்வாசனே (சுந்)

கானிலேமுன்னுளில்வள்ளி மானின்மையல்பூண்டவா
தானிகரில்லாது தேவர் சேனைகாவலாண்டவா (சுந்)

வாமிமைந்த னைகந்த சாமிநீகண்பாருமே
நேமிமீதிலேழகர் சாமிக்கின்பந்தாருமே (சுந்)

ஆயசையா என்ற வர்னமெட்டு.

இராகம் - பார்ஸீ - இந்துஸ்தான் - அடதாளம்.

ஓடிக் கண்ணிகள்.

வள்ளிநேசா மகிழும் பிரகாசா
மாசில்லா ஜெகதீசா—மெத்தவும்
வாடினேனே தேடினேனே பாடினேனே—இனி
வாருமுரு கையா—என்
னேரிலரு ளையா
வீரணிந்த மெய்யா—கண்
பாருமினித் துய்யா—முன்
சேரும்வினை கொய்யாய்—இங்
கருதவி செய்யாய்

மருமலி குஞ்
சரியுட னே
ரருமை மிகும்
படிதிக ழும் (வள்ளி)

நல்லற்புதமிகுந்த ஞானமான குருவே—நம்பிடு
அண்டர் மீதுகொண்டவாது நேரிடாது—வே

லேவிவீரங் காட்டி—மிகு
கோடக்கனல் மூட்டி—அட
மாயவுணர் கோட்டி—யுட
னுவியற வாட்டி—செஞ்
சேவற்கொடி நாட்டி—அன்
ருவலாயின் பூட்டி—இங்
தேவர்சிறை மீட்டி—நன்
னீலமாலை சூட்டி—செம்
பாவலர்கள் போற்றி—பன்
நாவலரு மேற்றி—தேம்
பூவரும்பைத் தூற்றிச்—சுப
சோபனங்கள் சாற்றி

மலரி நக
மிழ கிடவுங்
தொழு மழகர்
சாமி புகழ் (வள்ளி)

கைஸே நாஜ ூவதாஸே என்ற வர்னமெட்டு.

இராகம்-பார்வி-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்தில்மாநகர் வாசா—ஜெகதீசா—அருள்
செய்வாய் செங்கை வேல்முருகேசா (செ)

அநுபல்லவி.

மச—கந்தரமாய்த் தேவர் கோனை-எண்ணி
வாதுசெய்யுஞ் சூரர்தானே—மாள
வன்று நீ வென்ற குமரேசா-அருள்
செய்வாய் செங்கை-வேல்முருகேசா (செந்)

சரணங்கள்.

விதியோனைச் சிறை வைத்த நாத-குக
வேலே யீரார் குழைக்கி யாதா-உனை
மெத்தவும் பக்தி செய்வோர் நேசா-அருள்
செய்வாய் செங்கை-வேல்முருகேசா (செந்)

தங்கமயூர சிங்கா ரா-என
தன்னைவள்ளிக் கேற்ற மரா—அழகா
சாமிபவம் நீக்குஞ் சர்வேசா-அருள்
செல்வோம் செங்கை-வேல்முருகேசா (செந்)

ஆயரேஷம்கி ஷாடிதிலாவ் என்றவர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேண்டினேன் வடிவேலனே (வே)

அநுபல்லவி.

வேலவனே பாலன் முன்னே-அதி
விரைவாக வருவாய் சித்
திரமான மயிலோனே (வே)

சரணங்கள்.

வேதவிநோதம் விளங்கும் பிரசித்தனே
மெய்யாகிய கர்த்தனே-காரு
ணயமயாபரி சுத்தனே

வெங்கலி யிருள்
மேலிடா தருள்
வீரா தீரா
சூரர்கள் சம்மாரா உன்னை (வே)

சிரக்கப்பரை யேந்துஞ் சிவனருள் சேயனே
செம்மான் மகள் நேயனே-வானோர்
தம்மைக் காக்குந் தூயனே
தேமலர் தாளா
தீன தயாளா
தேவா காவாய்
பாவல னழகர்சாமி (வே)

பஜாயிமே தில்பேல என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

பாலசுப்ர மண்யா கண்பாராயோ-நீ
பட்சமுடனிச்சமயம் வாராயோ (பால)

அநுபல்லவி.

பந்தவிடையங் தனிலே
நொந்துமெலி வானேனே
பன்னகா பரணன்செவி
தன்னிலுப தேசிகனே
பஞ்சையினி யேதுசெய்வேன்
நெஞ்சமிரங் காய்தானே
பாகமதை யேதருவாய்
மாதவன் மருகோனே
படிமீதினி லென்றன் மிடிதீரவே-நீ
பட்சமுடனிச் சமையம் வாராயோ (பால)

சரணங்கள்.

மஞ்ஞைதனி லேறியமெஞ்
ஞானசிவ சண்முகனே
வாசமலி கின்றகழு
காசலமே வுங்குகனே
வாரணியு மாதரிரு
பேருமரு வுஞ்சுகனே
வாமிசுதனே யழகர்

சாமிக்கரு வீய்ந்தோனே
மறைநாலறியா குருநாதனே-நீ
பட்சமுட னிச்சமயம் வாராயோ; (பா)

அவோகவோனைநோமதுபதுலாவே என்ற வர்னமெட்டு.

இராகம்-மால்கோஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலனே வந்தாளு மிந்தவேளைதானே
வெகு காலமாய்
வெகு காலமாய்—நான்
மெத்தவு மோநம்பி
சித்தமிக வெம்பினேனே (வே)

அநுபல்லவி.

வாதுசெய்வ தேதிப்போது—எழில்
வள்ளிதெய் வானைபின்
உள்ளத்தெய் திடுங்கோனே (வே)

சரணங்கள்.

தேவர்சேனை காவலான—மா
தீரவசுர சம்
மாரா சமைய மிப்போதே (வே)

அழகர்சாமி பழகும்முருகா—என்றும்
அல்லும் பகலும் நான்
சொல்லும் முறைநீமீருதே (வே)

தஸ்குமாரேதும் ரேகுவாணு என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி,

ச்ாமிநாதா சற்றேயிதயங்
தானிரங்கு மே (சா)

அநுபல்லவி.

தானிரங்குந் தானிரங்குந்
தானிரங்கு மே
தானேதயை பாருமென்
றேனே யருள்தாரும் (சா)

நித்தநித்தமுந் துதித்தேன்
சத்திவடி வேலனே
கேரும்வினை கொய்யுஞ்சிங்
காரமயி லோனே (சா)

புத்தர்தனை வென்று முனம்
வெற்றி புரிந்தோனே
பூமிபுக ழும்மழகர்
சாமிதமிழ்க் கூற (சா)

அயாங்கரோகி என்ற வர்ணமெட்டு.

இராகம் - பார்வி - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

தண்டபாணியே யின்னமுஞ் ஜாலம்மேனையா
பண்டுவினை திருமுன்றன் பாலகனையா (த)

உன்மகிமை தன்னையெவ ருரைக்கவும்போமோ
கன்மன திரங்கியெனைக் காருமிதா மோ (த)

தையலொரு பாகனீன்ற சண்முகநாதா
செய்யவரை தோறும்வளர் தேமலர்பாதா (த)

வானவர்கோன் றன்மருகா மவுன தேசிகா
தீனதயாளகிருபை செய்திடும்யோகா (த)

மாலின்மருகா பழனி மாமலை வாசா
தாலமதி னழகர்சாமி தனையாளு மீசா (த)

திருச்சினஜாரியாம் என்ற வர்னமெட்டு

இராகம் - பார்வி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

திருவருள் செய்குவாய் தேவா சண்முகநாதா வா வா
தேவா சண்முக நாதா—காவாய்
தேவா சண்முக நாதா
தினைக் கானகக் குறமானையே
தேடியலோலா -பர- தேவியம்பிகையருள் பாலா (திரு)

உன்னையே நம்பினேன் ஓடிவந்தேயெனையாள்—முன்னே
ஓடிவந்தே யென்னை யாள்—சொன்னேன்
ஓடிவந்தே யெனை யாள்
ஒருபோதேனும் மறவாதே
உண்மையாகத்தானே-புக-ழோங்கிவிளங்குஞ்சீமானே (தி)

தந்தைக்கு மந்திரஞ் சாற்றுஞ்சற்குருநாதா-இன்பாய்
சாற்றுஞ்சற்குரு நாதா-அன்பாய்ச்
ஜகதீசனே அகநேசனே
சந்ததம்போற்றும்-அழகர்-சாமிதனையேகாப்பாற்றும் (தி)

சுனேசாஹேமேருதில் என்ற வர்னமெட்டு.

இராகம்-பார்வி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எனக்காருமையா அருள்தாருமையா
எனக்காருமையா அருள்தாரு மையா
ஏதின்னஞ்சூது ஏழையின் மீதுநீ
இன்பாக வோது (எனை)

தொகையரா.

இரங்காதோநின் சித்தமே
ஈசாயிரா று கரனே
வரந்தருவாய் நீ முத்தனே
மயில் நடனமிடுங் கர்த்தனே
மாமதியழகர் சாமியே புகழும்—நல்
வாகா யிப்போது (எனை)

ஜப்தகலந்தரு என்றவர்னமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - தாளம் - ஆதி.

கூர்வடிவேலவனே குறமாதொடு
குஞ்சரியாள் மகிழும் லோலா
சீர்கடம்பாபரண மயிலேறிநின்
சேயனையாதரிப் பாய்சீலா—இந்தத்
தாரணியில் வேறுகதி யாருமில்லையே—இதோ
சாற்றுமென்முறை கேழ்க்கவில்லையோ-எனைச்
சாரும்வினை தீரும்வரந் தாருமிப்போதே—யான்
சந்ததமுந்தனையே வந்தனைசெய்தேன் (கூர்)

சொற்பிரணவமதை யப்பரமனுக்கன்று
சுகமுடன்மொழிந் திடுங்கெம்பீரா
இப்பிறவியைநீக்கி நற்பதமளித்திட
ஏழைமுன்னோடியே நீவாராய்-மத
விற்பருவமாதர்மய லிற்புகுதிடா-தினி
மேலாகிலுமழகர் சாமிக்கருள்தா-அதி

வீரமிகுஞ்சூரர்களை வேறாவாட்டிக்-கோரும்
விஞ்சையர்கள் சஞ்சலந்தீர்த்தஞ்சல்புரியும் (சூர்)

உன்னழகுக்கேற்ற துரைநானே என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

ஓரடிக் கண்ணிகள்.

வண்ணமயூர மீதேறி—யிங்கு
வாகந்தநாதா என்னேரில்
அன்னைவள்ளி தெய்வ
யானைகுண லோலா
இன்னமுனைக் காணு
தேங்கி மிகவாடும்
யேழை முகம்பாரு-மீசா-ஜெக
மெங்கும் விளங்கும் பிரகாசா (வண்)

ஆறுமுருகா யீராறு கையா-அர
வாபரண னீன்ற மெய்யா
தாருகனை முன்னஞ்
சாடிய வனேடு
சேருபடை யாவையுஞ்
சீறியே வென்ற
தீரமிகுந்த வொய்யார-ஞான
தேசிகனுன கெம்பீரா (வண்)

மங்குல்தவழ் சோலைசூழும்—எழில்
வாய்ந்தபரங் குன்றில் நாளும்
தங்கும் மஹாதேவ
சற்குருவே பாத
பங்கயந் தன்னைப்
பணிந் தழுகர்சாமி
பக்தியுடன் போற்றத்தானே—அருள்
பாலித்திடுவாய் வேலோனே

தங்கநிற மேனியுள்ள என்ற வர்னமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - செஞ்சுருட்டி - தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

அன்பரகமே களிக்குந்
தென்பழனி மேவுஞ் ஜெகஜாலா—திரு

வாலவாயி லேயமர்ந்த
பாலசந்திர சேகரன்றன் பால (அ)

கைத்தலத்தின் வேற்படைப்
வைத்தரியின் வேற்பையருத்தோனே—திரு
கார்த்திகை மைந்தாகடைக்கண்
பார்த்திடு மெந்நாளும் போற்றினேனே (அ)

நீடியதோ கைதிகழ
ஆடும்பரி யேரியென்முன்வாராய்—திரு
வேமி வீதி லேயழகர்
சாமிதமிழ்க் கூறவருள்தாராய் (அ)

மைத்துனரே மைத்துனரே என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கோலமயி லேறிவருங் குமர குருபரனே
ஆலமுண்ட யீசனருள் அய்யா தயாபரனே
இரும்பு மிளகிடுமே என்துயரைக் கேட்டிடவே
விரிம்பிவந் தாதரிக்க வேண்டும் ஞானவடிவே
பொல்லா தவனெனினும் புத்திரனை யார்வெறுப்பார்
அல்லாதுயென்பிழைகள் யாவையுமேநீர்பொருப்பீர்
பொங்கும் ருத்ராரடமும் பூதியபி சேகரனே
சங்கம்புகழு மழகர் சாமிக்கரு ளீய்ந்தோனே

தாஜராஜ தாஜராஜ யென்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவ தேவ தேவர்போற்றுந் தேவிபாலனே வுயர்

அநுபல்லவி.

தென்பரங்குன்றினிலன்புடன் மேவிய செங்கதிர்வேலனே

சரணங்கள்.

தினமும் நானுந்தனைக் கனமுடனெண்ணியே
செந்தமிழாற்பாடி

திறமிகுமுனதிரு திருவடிதனிலெந்தன்
சிறமதை முடிருடி
மனதினில் மகிழ்வுற கனவிலும்நினைவொடு
வாழ்த்திய வந்தனமொருகோடி
மைந்தன் சிறு பாலன்முன் சுந்தரமயிலேறி
வந்தருள் செய்நாடி
வந்தருள் செய்நாடி
வந்தருள் செய்நாடி (தேவ)

தித்திக்கும் செங்கரும்பே என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

தேவாயெனைக் காவாய்பர	தேவியின் பாலா
சீரார்வடிவேலா	செழுந்
தேனுரைகடகம்	பாரமேதிகழ்
தீனதயாளா	மிகு ஞானகுணாளா,
கந்தனே செந்தூரில்வளர்	கர்த்தனேயீசா
கண்பாருஞ்சர்வேசா	மத
கரியுரிபர	னிருகுழைதனி
லருளுபதேசா	எப்பொருளினும்வாசா
ஏதுயினி யேனுமன	மிரங்கவுமிலையா
இரும்போவெகு மலையா	மிகு
யேழையெந்தனே	யாளவேயிந்த
வேளையே வருவாய்	நிந்தாளேயே தருவாய்
சண்டன் வராதேயுதவுஞ்	சண்முகநாதா
தண்டாமரைப்பாதா	மா
தாலமீதினி	வேயழகிரு
சாமியுந்தானே	துதிமாமயிலோனே

அள்ளியள்ளிக்குடிக்கும் என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

உள்ளமிகமகிழும்	வள்ளி மணாளனே
ஒய்யாரமானதோளனே	மலர்தாளனே
ஒய்யாரமானதோளனே	
உன்னதமாகிய	வன்னமயூரக்
தன்னிலுலாவியே	யென்னிடம்வாரும் (உள்)

ஆறுமுகாகவலை திருமின்னேரமே
ஆதரித்தாளுன் பாரமே அருள்கூறுமே
ஆதரித்தாளுன் பாரமே
ஆருமிகரில்லாச் சூரரைத்தானே
வீரியமாகவே வேறறுத்தோனே (உள்)

உன்னையல்லாது தெய்வ மின்னம்வேறேதையோ
உன்றனடிமையானையா ஓமுருகையா
உன்றனடிமையானையா
உத்தமியான சத்தியின்பாலா
நித்தமென்மீதிற் சித்தம்வைவேலா (உள்)

கஞ்சன் முடியதனில் மிஞ்சப்புடைத்தவா
கந்தா சரஹணபவா கலிதீரவா
கந்தா சரஹணபவா
காமன் மருகோனே நேமமாயழகர்
சாமிதினமுன் நாமமேபோற்றிட (உள்)

ஆவோவோ சவாரி என்ற வர்னமெட்டு.

இராகம்இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாமயூரமிசை யேறியே
வரந்தாவா சண்முககுகதேவாநீ (வா)

அநுபல்லவி.

தேவா தந்துயரந்தீர்த்த ஜெயவடிவேலா
தெய்வயானைதின மருவுந்திண்புயலோலா
சிந்தனைசெய்தேன் நானெந்தநேரமும்என்முன் (வா)

பக்தர்களுளத்திலங்கும் பரமதயாளாதினம்
பண்ணுடன் சிறுபாலன் பணிதண்மிகுந்தாளா
பாரோர்புகழ்மா ஆத்ததனில்வாசனே என்முன் (வா)

ஆண்டவா என்ற வர்ன மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலவாயிந்த வேளைஎன்னையாளவா (வே)

அநுபல்லவி

மேதினிதனிலுத்தன பாதமேநம்பினேன்
வேளே என்னை யாளவா வடி (வே)

சரணங்கள்.

ஆலாலமுண்டவற் கருளும்ஞான தேசிகா நான்
அண்டினேன் அண்டினேன். அண்டி—அண்டி
அநுதினமுன இணையடியினைக்
கனவிலுமனமதனில் மறவேன் (வே)

கோலமிகுமயூரமீதுவந் தருள்புரியுங்
கோமானே கோமானே கோமானே கோமானே
குவலயத்தி லென்பவமகற்றிடு
பவனே மெய்த்தவ விரதரேற்றிடும் (வே)

மாலோன் மருகனே யெக் காலமுமாவூர்த்தமர்ந்த
வாசனே வாசனே வாசனே வாசனே
மலர்மிசையுறை பிரமனைமுனஞ்
சிறையதுசெய்தே மறையருளிய (வே)

பாலனிச்சிறுவன் றமிழாலே என்றுமுன்னைப்
பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன்
பரிவுடன்குறமகள் மருவிய
சரவணபவ வரதனேகதிர் (வே)

மலடிவயற்று மகன்போலே என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

மாசுணபூஷணனருள் பாலா வன்ன
மாமயிலேறியேவா சீலா குற
மாதகமேமகிழும் லோலா கூர்
வடிவே லா

தேசிகனே திருச்செந் தூரா எதிர்
தேவரு சூரர்கள் சம் மாரா மிகு
தேவர் சேனைபதியே தீரா வுயர்
சிங்கா ரா

அரி திருமருகனேகும ரேசா யெனக்
காதரவாரினி யீசா உனை
யாரறிவாரருமறை வாசா கதி
யருளீ சா

சரவணபவசிவகுரு நாதா யான்
சாற்றும் முறைசெவிகேட் காதா நின்
தாசன்முத்து சாமிதொழும் பாதா மஹா
தவ நீ தா

நடனமாடிய பாதா என்ற வர்னமெட்டு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி,

பல்லவி.

சிந்தனை செய்மனமே உயர்
கந்தனையநுதினமே நீ (சிந்)

அநுபல்லவி.

பந்தவினையகற்றும் பக்தருடனேசேற்கும்
பரிவுடனுனக்கினிப் பரகெதியுண்டாக்கும்
விந்தையதாகவே வேணபொருள்கிடைக்கும்
மேலானவரங் கொடுக்கும்-நீ (சிந்)

சரணங்கள்.

சத்துருசம்மாரனுத்தமற் கனுகூலன்
சகலலோகாதார சங்கரியருள் பாலன்
பக்தன் சிறுவன்தினம் பணியுமாவூற்றில்வாசன்
பன்னிருகரஈசன் நீ (சிந்)

இந்த உடம்பை நம்பி என்ற வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கந்தா என்மேற்கடைக் கண்பாரையா என்
சிந்தாகுலமதனைத் தீர்த்தமெய்யா (கந்)

பந்தபாசத்தால் மனம் வெம்பினேனே நின்
அந்தமிகும்பாதமே நம்பினேனே (கந்)

மாவூற்றிலன்புடன் வாழ்பவனே எனக்
காபத்துமுமற்கண் பார்த்தீகனே (கந்)

சுத்தமெஞ்ஞான சுகாதீசனே தினம்
சிறு பாலன்போற்றும் குகநாதனே (கந்)

இன்ன மிறக்கமில்லையா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உந்தனையே நம்பினேனே ஒடிவாகந்தநாதனே (உந்)

அநுபல்லவி.

சந்திரசேகரனருள் சண்முகா சண்முகா (உந்)

சரணங்கள்.

சத்துருசம்மாரனே உத்தமகெம்பீரனே
வெற்றிவடிவேலனே வேலனே வேலனே (உந்)

எங்கும்புகழ்மாவூற்றினிற் தங்கிவாழும் தேசிகா
செங்கமலப்பாதந்தா பாதந்தா பாதந்தா (உந்)

சித்ரமயிலேறிய தேவாவுனைக் கோரியே
சிறுபாலன்நான் பாடியே பாடியே (உந்)

காருங் கைலாசவாசனே என்ற வர்ன மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேறுதுணையாருமில்லையே வேலாநீயன்றி (வே)

அநுபல்லவி.

ஆறுமுகமானசீலா அம்பிகைமகிழும்பாலா
வாருமுன்மயில்மீதேறியே மைந்தனையாள (வே)

சரணங்கள்.

சித்தமுகந்தேயின்னேரம் பக்தனைக்காப்பதுன்பாரம்
அத்தனன்னைதெய்வமும்நீயே ஆண்டருள்வாயே(வே)

அண்டமாயிரத்தெட்டையும் ஆண்டசூரபத்மனையும்
துண்டிரண்டுசெய்தகையனே தொழுதேனையனே(வே)

பக்தன்சிறுபாலன்துதி. கர்த்தனேமாவூற்றுப்பதி
உத்தமனேகாவாயித்ததி ஓமகருணாநிதி(வே)

உன்னையல்லால் வேறு என்ற வர்னமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி,

வன்னமயில் மீதேறி வந்தெனை
யாட்கொள்வாய் மாவடிவேல் முருகா (வன்)

அநுபல்லவி.

அன்னவாகனன்முதற் விண்ணவர்பணிந்தேத்தும்
ஆறுமுகப்பொருளே வேறு தஞ்சமில்லையே (வன்)

சரணங்கள்.

தந்தைதாய் குருதெய்வஞ் சகலமும்நீதானே
தமியனையாண்டிட வேதருணந்தானே
இந்திரன்றுயர்தீர்த்த எழில்மிகும்வேலோனே
என்றுமுன்பாதமே அண்டினேன் சீலனே (வன்)

நித்தியநிராமய நின்மலசொரூபனே
நீதமிகுந்திரு மாலின்மருகனே
பக்தர்க்குதவிசெய்த பரமதயாளனே
பராமுகமின்ன மாகாதையனே (வன்)

பாலன் சிறுவன்போற்றும் பன்னிருகையனே
பார்புகழ்மாவூற்றுப் பதிமேவுமெய்யனே
ஆலமுண்டோர்குப தேசித்தவையனே
அம்புவிதனிலுன்னை யன்புடனம்பினேனே (வன்)

ஆயமுஜே தர்தேஜி என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

ஆலமுண்ட மீசனுக்கன் பான குணசீலா-எனை
ஆளுமையாமுறை கேளுமையா-முரு
காறுபடை வீடுள்ளோ னே-வேறுகதி
யாருமில்லை நீயேதா னே-எனை
ஆளுமையா முறை கேளுமையா

தொகையறு

அகார உகாரமே ஆனந்தமான சின்மயமே
அகண்ட தத்துவமானகாரணு ஆராதாரமே
அரூபமே அமர்சிறை மீட்டுமற்புதமே
அண்டரண்டங்களுமலரவே அயில்கொண்டு அவுணர்களையேசிதைத்த

அமலா வந்தே யுதவுங் கமலபதந்தானே
அன்பரக மகிழுஞ் செம்பொன் மலேயோனே
ஆதவகுல கோபாலன் மருகசுர முருகா
அழகர்சாமி துதிக்குந் சர்வேசா-எனை
ஆளுமையாமுறை சேளுமையா (ஆல)

அவனியில் யாரேனும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாவடிவேலனே மலைமகள்பாலனே
சேவடியைப்பணிந்தேன் தினமெனையாண்டிட (வா)

மாதவன்மருகனே மறைபுகழ்முருகனே
நீதனுகாமலுந்தன் திருவடிதந்திட (வா)

வேதனைச்சிறைசெய்தாய் விண்ணவர்துயர்கொய்தாய்
மேதினிதனிலெனக் கர்தாரம்நீதானே (வா)

சிறுவன்பாலன்மேற்கிருபை வைத்திடுவாய்சீமானே
வற்றிடாப்பொய்கைசூழ்ந்த மாவூற்றில்வாழ்கோமானே (வா)

மஞ்சுநிகர் குந்தள மென்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.

கண்ணிகள்.

சிதமலியும் பழனிவாழ் தண்டபாணியே-அண்டினேனுன்னை
தேவர்கள் சேனாதிபதியே-அருட்
சித்தமேதரு முத்தனேயுல
கத்துளோரதி பத்தியேபுரி
சீலனேமுன் ஞானில்வம்பு
செய்யுமவுணர் நையவேவாட்டுந்
தீரனே தீனதயாளனே

ரஞ்சிதமிகுந்தகந்தனே வள்ளிகுஞ்சரி-உள்ளமகிழும்
நாதனேவந் தாளுமெந்தனை-நாளும்
நம்பினேனகம் வெம்பினேன்மிகு
துன்பமேதவி ரன்பர் நேயனே
நற்கதிதனையே நல்குவாய்
ரத்தினமய முச்சிதமபின்
நாடிநட மாடிய பாதா

இக்கரையந்திரமென்னவே சூழுமிரு - வினைதவிர்க்கா
சேதமக்குத் தர்மமல்லவே-நேமி
எங்கினும்புகழ் தங்குமிங்கித
நங்கைபங்க னுவந்துதந்திடு
மீசனேயீ ராறுகரமும்
முகங்களாறுந் துலங்குமுன்னை
யேமுத்து சாமிபோற்றவே

கோஞ்சு மஞ்சுகமே என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

சரணங்கள.

ஆரரிவாருனை அய்யா-எழில்
ஆறுமுகாபன்னிரு கையா-துதி
கூறும் பஞ்சாக்ஷர மெய்யா-வள்ளி
கூடிமருவிய துய்யா

பண்டமிர்தங்கடைந் தோனே-திருப்
பாற்கடல்வாசகன் றனே-மகிழ்
கொண்டமருகனென் போனே-உன்னைக்
கோடிதுதிசெய்தேன் யானே

சந்ததமுமுயர் தங்கம்-பவத்
தாழிகடத்துமா வங்கம்-ஆடல்
எந்தவுலகினும் பொங்கும்-நமக்
கேகுமரனருள் தங்கும்

இத்தனைவர்மமா காது-இந்த
யேழைமுறைவீண் போகாது-சொன்னேன்
சத்தியமாகயிப் போது-சேவை
தந்துரக்ஷிப்பாய் தப்பாது

தென்பழனபுரி வாசா-மஹா
தேவனேயன்பர்கள் நேசா-மிக
நம்பினேன் பர்வ நாசா-ஞான
ரஞ்சிதனேமுரு கேசா

வாமியுதவுமா வீரா-மஹா
வானவர்கட்குப காரா-அழகர்
சாமிதுதிக்குங்கெம் பீரா-எதிர்
சாடிடுஞ் சூரசம் மாரா

வேண்டினேன் சம்போகமே என்றவர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஓம்நமசிவாயனே புவந்தஞானசீலமே
தாமதமேன்வேலனே தற்காருமனுகூலனே
சாமிகுருநாதனே சற்றுமுனையேவிடேனே
காமன்குமாரிதனைக் கைகலந்தயோகனே (ஓம்)

வாருமிந்த நேரமே வருந்துதநின்பாரமே
சேரும் வினை தீருமே சிங்காரஞானதீபமே
மாரா விசாரமே மாற்றுமுந்தன்பாரமே
நேராய் நிராமயமே நின்பதமேதாருமே (ஓம்)

அன்னைசிவகாமியே யருளுங்கந்தசாமியே
சொன்னேனழகர்சாமியே சோதிக்காதேயின்னேமியே
பன்னுஞ்சுரர்பதியே வாழ்த்துந்தயாநிதியே
இன்னமெவர்கதியே யில்லைவந்தாதரியே (ஓம்)

போயுரைப்பாயே அநுமானே என்ற வர்னமெட்டு.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வேலாயுதாசரணம் இந்தவேளை வந்துனது
தாளிணைதருவாய் (வே) சூலமுடனே
கபாலமேந்துந்திரு நீலகண்டனருள்
பாலனனவடி (வே)

கோலமிகுமயூரா குறவஞ்சிதழுவுஞ்சுக
ரஞ்சிதனேயோகா (கோ) தாலமதனி
லுன்னைப்பூஜைசெய்யுந்தொண்டற்
கென்னளும்வரமருளுஞ் சீலனனவடி (வே)

ஆதாரம்நீயேயெனக்கு வேனையன்றிவேறுண்டோ
எண்டிசைதனில் (ஆதா) பாதமதனையெக்
ஞளுந்துதிசெய்தனே நாதனே
பிரக்யாதனனவடி (வே)

பாலன் சிறுவன் பணியுந்திருபன்னிரு
கையா என்னிருதையா (பா) ஞாலம்புகழு

மாவூற்றில்மேவிய ஞானபண்டித
ஞானவா வடி (வே)

வந்தனர் சுகந்தவுல்லாச என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

தஞ்சமுந்தன் பாதமேவேலா
சண்முகனை நன்மைசேர்ஞான
சங்கரியருளியபாலா வுனைச்
சந்ததமுமேவந்தனஞ் செய்தேனெனக்கிளையாள்வா
யிந்தவேளையுன் தண்ணருள்புரிந்துகாருமே
வினை தீருமே கதிபாருமே நீ
தங்கமயில் மீதுவாருமே (தஞ்)

கொஞ்சமுந்தனெஞ்சிரங்காதா
குமரகுரு பரனே திருக்
கோவிந்தன் மருகனே வாதா வுயர்
குருமுனிக்குபதேசமருளிய சரவணபவனே அழகிய
கோதிலாத மாமலர்த்தாளா
கோதைமணாளா கோரினேன்நாளாயென்
குற்றமகற்றியே நீயாளாய் (தஞ்)

மஞ்சிசூழ்மாவூற்றினில் வாசா
மனமகிழ்ந்து தினமுகந்து
மைந்தன் சிறுபாலன் துதியீசா பெரும்
வாரியில்மறைசூரனை யொருவேலினை
சிறுகூறுசெய்தவா வாதும்செய்வதேதுயிப்போது
மைந்தனென்மீது வன்மமோவோது ஏழை
வழுத்துஞ்சொற் கேளாதாவுன்காது (தஞ்)

சையாரே என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

செய்வாய்கிருபையென்மே லய்யாமுருகனே
சேவடி நம்பினேன்

அநுபல்லவி.

சேவடிநம்பினேன் தினமுமேயன்புடன் (செ)

சரணங்கள்.

பைவாயரவணிந்த   மெய்யன்மனமுகந்த
பாலனேயெனக்கருள்   சாலஞ்செய்யாமலே (செ)

சீருற்றமாவூற்றின்   மேலுற்றவேலனே
மேலுற்றவேலனே   யாளும்சிறுபாலனே (செ)

வாய்முத்தஞ் சிந்திப்போமோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாமகிழ் வாகவே   பன்னிருகரனே—வன்ன
மா மயூர   மீதிலேறி

அநுபல்லவி.

பூதலமீதில் கந்த   நாதனே நின்னையெந்தப்
போதும் மேமர   வேனன் பாதா
வாரிங்கேதயை பாருங்கந்தனே

சரணங்கள்.

வேகயின்முகமை திண்புய   தாய் சத்தியுதவிய
வேலா காதுரை   மானுளைப் பணர்
வோனே நின்பதந்   தானே தந்திட (வா)

தாசனழகர்சாமி   நேசாகுமாரசாமி
சாடுஞ்சூரரை   யேமுன் வேறர
நேருந்தேவனே   பாரும் நீகதி (வா)

இந்தமங்கையார் என்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

கந்தனே கண்பார் கடம்பணி திடம்புயவேற்

அநுபல்லவி

சுந்தரமிகுந்தோகை   மாமயிலோனே
சோதிக்கலாகாது   யேதொழுதேனே
துன்பமுறுமமரர்   கின்பம் நல்கிடமுன்னித்
துஞ்சும்படியாகக்கிர   வுஞ்சமலையைத் துளைத்த (கந்)

சரணங்கள்.

போதனைச்சிறைவைத்த புண்ணிய சீலா
புவனத்தில்வள்ளியை மணந்த உல்லாசா
பொல்லாதவல்வினைக ளெல்லாமகலவேயிப்
பூதலத்தில்வந்தகுரு நாதனுகிய மெஞ்ஞானக் (கந்)

குறுமுனிக்குபதேசிகா குமரேசா
கொண்டலுலவும்பரங் குன்றுறைவாசா
கொஞ்சு முனதுதிருச் செஞ்சரணையேதினங்
கோரியேயழகர்சாமி கூறியதமிட்குவந்த (கந்)

ஸ்ரீராமச்சந்திரனே என்ற வர்ணமெட்டு.

இராகம் - பார்சி - நோட்டு - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

ஆறுமுகனே பாரும் ஆருதவிநீகூறும்
நேரும் வினையே தீரும் வா வா வா
அய்யனே முருகையனே
வாரிட்ட வங்கையிரு பேருற்றவாகினமும்
சீருற்ற நின்னருளைத் தா தா தா (ஆ)

தந்திதனையே யுரித்த சுந்தரனலன்றெடுத்த
கந்தனே யுன்றுளடுத்தேன் வா வா வா
தஞ்சமின்றியிதோ கெஞ்சினேன்
சந்தமலிகின்றதிருச் செந்திநகராவுனது
சிந்தை மகிழ்ந்தேவரமே தா தா தா (ஆ)

கோலமயின் மீதமரும் வாலகுமராதுடருஞ்
சாலவினையே தவிரும் வா வா வா
கூவினேன் மிகத் தாவினேன்
காலமதிலே யழகர் சாமியனுகூலமுற
வேலவனே நீகதியைத் தா தா தா (ஆ)

மெத்தப்பசியாகுதம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சித்ரமயிலேறிவாரும் செங்கைவடிவேலனே (சித்)

அநுபல்லவி.

சத்தியருளியபாலா சஞ்சலந்தீர்த்தசீலா
நித்தமும்மலைகொழிக்கும் நீடுசெந்தூர்வாசனே (சித்)

சரணங்கள்.

மெய்ப்பிரணவந்தனையே விரும்பியரனார்செவியே
ஒப்பவினிதாகமுன்னம் ஓதுங்குருநாதனே (சித்)
அந்தரர்சேனைபதியே ஆனகருணாநிதியே
சிந்தூரநுதலிலகுந் தேவிவள்ளிநாயகனே (சித்)
வேலைமலைதூளிபுரி வீரனேயெனையாதரி
தாலமதிலேயழகர் சாமிதமிழ்க்காயுவந்து (சித்)

ஐயோ என் ஜானகியை என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

சங்கரனருள்பாலா சரசவள்ளிமனோலா
சிங்காரமயிலேறிச்சேவைதரு வாய்வடிவேலாவேலாவேலா
திருமாதவன்மருகா சித்தம்வைத்தாள்முருகா
குருவாய்மந்திரத்தைகுடையிலுபதேசித்த குமராகுமராகுமரா
தேவர்சேனாதிபதியே திக்கில்லைநீகதியே
மாவல்லவுணரைச்சம்மாரஞ்செய்த சண்முகநாதாநாதாநாதா
திருப்பரங்கிரிவாசா தெய்வானைமகிழ்நேசா
உருக்கமுடனடியேன் ஓதும்முறைகேட்டோடிவாராய்வாராய்
இளகவில்லையோநெஞ்சம் ஈராருகரனேகொஞ்சம
பழகுமழகர்சாமிபகரும்பைந்தமிழ்க்கின்பந் தாராய்தாராய்தாராய்

முத்துசாமிக்கவிராய ரவர்கள்பாடிய

திருநெல்லூர் கார்த்திகைதீபமென்ற ஒரடி மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருவருள்செய்வாய் குகனே—அட்ட
திக்காவமும்பயந்து வெட்குரமயின்மேல்வந்து(திரு

அநுபல்லவி.

மருவிவள்ளிகுஞ்சரி யிருபுரத்திலுங்கொஞ்ச
மங்களவாத்தியங்க ளெங்குமுழங்குமிஞ்ச
துய்யருமாமலற் பாதமேதாரும்
மெய்யனேயென்றடி யார்மிகக்கோரும்
மறையாமமாகிய மான்மருகா
பிறவிப்பிணிநீத் திடுவாய்முருகா
மாராமலேயுனது பாராயணமுறைக்க
மாலாகிவருந்தாமல் வேலாமணங்களிக்கத்

சரணங்கள்

மன்றல்புரியும்பாங் குன்றமுடனேசெந்தில்
மானகரமும்பழ னுபுரிதனில்முந்தி
நின்றவனே தணிகை நிரைதருக்களில்மந்தி
நீடுகனிகள்பிரி நிரைக்குங்கரத்திலேந்தி
நிலமகிமே யுலவிடச்—சஞ்
சலவினைகளு மோடிடச்—சுடர்
நெத்திக்கண்ணுதஞ்சிவ சத்திக்குமரனென
நத்தித்துதிப்பவற்கு முத்திக்குவித்தாகவும்
நீபமலர்மாலையணி மார்பனெனும்நீதா
தேவர்கள்சேனதிபதி யானருகுநாதா
நித்தமும்நர்க்கிதநித யத்தினிலுவந்துமொரு
மித்தெதிரியாகவரு புத்தரையதம்புரிய
நேரிலகும்வீரு போரிலுயர்தீரு
ஆறுமுகமாரு பாரிலுபகாரு
நிமலனருள்கனிக்காய்ப் புவனமதைநொடியில்
கவனமாகவேசுற்றும் மவுனதேசிகஞான
நிட்களநிராமயம் நிரைந்தவயோகா
சத்குணசடாக்ஷர சன்யாசமுறைவாகா
நின்தேகமீதுபுனை யும்பூதிருத்ராக்க
மின்தாவடங்களுடன் முன்கோவணந்திகழ

நிற்ப தேதுமனது-மொப்ப யாருமிகழ்ந்து-செப்பக் கவலையின்றி
எப்போதுமே மகிழும்-நித்தனேமுத்தல மெத்தலமும்புகழ-நிற்ப
வேநீ விளையாண்டவா-கைத்தலமீதயில் வைத்தசுராதிய-ரைக்கடிந்
தே செயம்பூண்டவா-நேராசவந்தாகரி ஈராறுகையயெனை-நினைத்தி
டும் வல்பிணிக-ளைத்தையு மேயரவே-தனைச்சிறையேவைத்த-வனை
த்தொழுதேன் மெத்த-நின்பெருமையுஞ் சேவலின்துவசமாடக்
கின்னரருங்கிம் புருடர்நன்னயமாய்ப்பாட-நேமமுடனே முத்து
சாமிகலிநீங்கச் - சேமகரமேபெருகும் மாமகளுமோங்கத் (திரு)

மங்களம்.

நீமை என்ற மெட்டு தாளம் - ஆதி.

நீலமயில் வாகனற்கும் நித்யசுபமங்களம் (நீல)
நீலகண்டேசனுக்குந் தில்லைநடராஜனுக்கும் (நீல)
ஆலிலைமேற்பள்ளிகொண்ட அச்சுதற்கும் லெட்சுமிக்கும் (நீல)
அண்டங்களெல்லாம்படைத்த அன்னவாகனத்தோனுக்கும் (நீல)
அங்கயற்கண்ணம்பிகைக்கும் அருள்தருஞ்சரஸ்பதிக்கும் (நீல)
திங்கள்வதனத் தெய்வானை மங்கைவள்ளியம்மனுக்கும் (நீல)
பக்திமிகுந் தொண்டர்தமக்கும் பஜனைசெய்யும் அன்பர்கட்கும் (நீல)
பாலன்சொல் செந்தமிழ்க்கும் குவலயத்தோர் யாவருக்கும் (நீல)

முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்.

நாதவிந்துக ளாதிநமோநம
　　வேதமந்த்ர சொரூபா நமோநம
　　ஞானபண்டிதஸ் வாமீநமோநம　　　வெகுகோடி

ஞானசம்பு குமாராநமோநம
　　பூமியந்தரி பாலாநமோநம
　　நாகபந்த மயூராநமோநம　　　பரசூரர்

சேததண்ட விநோதாநமோநம
　　கீதகிண்கிணி பாதாநமோநம
　　தீரசம்ப்பரம வீராநமோநம　　　கிரிராஜ

தீபமங்கள சோதிநமோநம
　　தூபரம்பரைசீலாநமோநம
　　தேவகுஞ்சரி பாகாநமோநம　　　வருடாராய்

ஈதலும்பல கோலாலபூஜையு
　　போதுநன்குண வாசாரநீதியும்
　　வோதநன்குரு சீர்பாதசேவையு　　　மறவேனே

வேழ்தலம்புகழ் காவேரியாள்விளை
　　சோழமண்டல மீதேமனோகர
　　ராசகெம்பீர நாடாளுநாயக　　　வயலூரா

ஆதரம்பயி லாரூர்தோழமை
　　சேர்வைகொண்டவ ரோடேமுனாளினி
　　லாடல்வெம்பரி மீதேறிமாகயி　　　லையிலேகி

யாதியந்தமுலா வாசுபாடிய
　　சேரகொங்குவை காவூர்நன்னடினி
　　லாவினன்குடி வாழ்வானதேவர்கள்　　　பெருமாளே

வேறு சந்தம்.

வங்கார மார்பிலணி தாரோடுயர் கோட்டசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசியிதழ் மலர்போல

மஞ்சாடு சாபநுதல் வாளனைய வேல்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ னுசைமைய லிடுமாதர்

சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர்சுழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீசியவர் மாயவலை யோடடியே னுழலாமல்

சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெந்தோட மூலவழல் வீசுவுப தேசமது
தண்காதி லோதியிரு பாதமலர் சேரஅருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தா குமாரசிவ தேசிகா நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோநமென விருதோகை

சிந்தான சோதிகதிர் வேலவ நமோநமென
கங்காள வேணிகுரு வானவ நமோநமென
திணசூர ராழிமலை தூள்படவை வேலைவிடு முருகோனே

இந்தோ வேதபிரமாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
இன்பான தேனிரச மார்முலைவி டாதகர மணிமார்பா

எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகும்
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகோ
டென்காதல் மாலைமுடி ஆறுமுகவா வமரர் பெருமாளே

வேறு சந்தம்.

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமருளாடி விளையாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமடகூடமொடு பொருள்தேடி

வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்த்

தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிகுடி யோடுதிரி — யுழுநாளிற்

சூலைசொறி பிளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூவிருமல்
சூழலுற மூலகசு மாலமென வாறியுட — லழிவேனோ

நாலுமுக னாதியரி யோமென அதாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுமென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு — மிளையோனே

நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் — மயில்வீரா

ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னேடொரு விராதனெழு
மோதகட லோடுவிரல் ராவண குழாமமரில் — பொடியாக

ஓகைதநல் வாழிவிடு மூரிதனு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மருகா எனவே
யோதுமறை ராயெசுர மேவுகுமரா வமரா — பெருமாளே

வேறு சந்தம்.

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப்பாய்ந்துகடவோடடமோடாடிவிடுவிஞ்சயாலே

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபணி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ் — வன்புகூறத்

தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் போந்துவினை மூடியடியேனுமுன — தன்பிலாமல்

தேட்டமுறத் தேர்ந்துமயிர் தாமெனவே யேகிநம
னோட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுநெசி காலனணு காமுனரு — ளன்புதாராய்

வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேர்ந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க்காண்டவுனை வாழ்வுநிலையாகவைக்கும் — விஞ்சையோனே

வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணறு ருங்குமழு வாளியெனத் தாதைபுர
மேட்டையெறித்தாண்ட சிவலோகன்விடையேறி யிடமுங்கொளாமல்

கோட்டுமுலை தாங்குமிழை யானயிடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ கானசிவ காமிவிறல்
கூறுறுவனைக் காய்ந்தவபி ராமிமன தாரவருள் கந்தவேளே

கூட்டுநகித் தேங்கியவே ளாறுதர ளாறுதிகழ்
நாட்டிலுரைச் சேர்ந்தமயி லாவளிதெய் வானையோடே
கூற்றுவிழத் தாண்டியென தாசுமகில் வாழ்குமர தம்பிரானே

வேறு சந்தம்.

மைக்குழலொத்தவை நீலோ மாலோ
அக்கணிணைக்கிணை சேலோ வேலோ
மற்றவர்சொற்றெளி பாலோ பாகோ வடிதேனோ

வத்திரமெச்சசி தானோ நானோ
குத்துமுளைச்கிள நீரோ மோரோ
வைப்பதியைக்கிணை நூலோ மேலோ வெனமாதர்

தக்கவுருபினுள் மாலே மேலாய்
லச்சையறப்புணர் வாதே காதே
கச்சையெனத்திரி நாயே னையா தலையாதே

தற்பொறிவைத்தருள் பாராய் தாராய்
தற்சமயத்தக லாவே நாதா
தத்துமயிற்பரி மீதே நீதான் வருவாயே

முக்கணர்மெச்சிய பாலா சீலா
சித்தசன்மைத்துன வேளே தோளார்
மொய்த்தமணத்த துழாயோன் மாயோன் மருகோனே

முத்தமிழ்வித் வவிநோதா கீதா
மற்றவரொப்பில ரூபா தீபா
முத்திகொடுத்தடி யார்மேல் மாமேல் முருகோனே

இக்கிநிறைத்த ராலூர் சேலூர்
செய்ப்பழனிப்பதி யூரா வாரூர்
மிக்கவிடைக்கழி வேளூர் தாரூர் வயலூரா

எச்சுருதிக்குளு நீயே நாயே
சுத்தவிறற்றிறல் வீரா தீரா
எட்டிகுடிப்பதி வேலா மேலோர் பெருமாளே

மகா-ா-ா-ஸ்ரீ T. T. சங்கர தாஸரவர்களால் இயற்றிய

முருகன் திருப்புகழ்.

தந்தான தந்ததான தந்தான தந்ததான
தந்தான தந்ததான—தனதானா.

விந்தோடு பண்டுநாத முஞ்சேர வந்ததேக
மின்போலு மென்றபேதி யுணராதே

விஞ்சாதி பன்கெடாத வன்பாள னென்று நாளும்
விண்டேய லைந்துமாயை யதனாலே

சிந்தாகு லங்கண்மீறி கன்றேபு ரிந்திடாது
நிண்டாடு கின்றமூட னெதிரேநீ

திந்தாதி திந்ததாதி யென்றாடி நின்றதோகை
திண்டோளி லங்குவேலி னோடுவாராய்

மந்தாகி லங்கடாவி யன்றோர்க ரும்புநாடி
வண்டேவு வஞ்சன் மாள னுதலாலே

வம்பாடு கொன்றைமாலை கொண்டார்ம கிழ்ந்துபோதம்
வந்தேசொ லென்றபோது மகிழ்வாகி

இந்தேறு சந்த வேணி யுன்பாத கஞ்ச மாக
வின்பான மந்த்ர மோது குருநாதா

இங்கோடி வந்துகாணு மன்பாளர் துன்பமேகு
மென்பால தண்டபாணி முருகோனே.

வேறு சந்தம்.

தத்தான தந்ததான—தத்தான தந்ததான
தத்தான தந்ததான—தனதானா.

பெற்றார்கள் பெண்டுபாலர் மற்றான பந்துநேசர்
பெட்பாவ ரென்றுகூடி யுறவாடிப்

பித்தார்வ தன்றியேம னுற்றாலெ திர்ந்திடாது
பிற்போவரென்றபேதி யறியாதே

கற்றார்கள் சிந்தையூடு வைத்தோது நின்சரோரு
கம்போது நம்பிவாழ நினையாத

கற்பாரை நெஞ்சனேனு மிப்போது வந்துவாழு
    கைக்கான தொண்டு பூணும் வரமீவாய்

பநூரார்பு ரங்களீடு கெட்டேய ழிந்துநீறு
    பட்டோட வென்றகோபர் குருநாதா

பத்தாகி நின்றமாய னற்பாய்வ ளர்ந்தமாதர்
    பட்சாதுலங்கு கோல மணிமார்பா

நற்றூர ணிந்ததோளி னுற்றுருகின்றசேவ
    னத்தாரை யென்றும்நோவ விடுவோனே

சுக்கிரர் சந்தமோது சொற்சாரு நண்புகூடு
    நற்பாலதண்டபாணி முருகோனே.

வேறு சந்தம்.

தனதான தந்ததான—தனதான தந்ததான
தனதான தந்ததான—தனதானா.

புவிமீது வந்தசேதி யெதுவாகு மென்றுதேறு
    புலனேது மின்றிநாடு பலவோடிப்

பொருடேடி நின்றுமாத ரொடுகூடி யின்பலீலை
    புரிமூட னன்பிலாத படுபாவி

கவிபாடி யின்று நானு னடிசூடு தொண்டு வேலை
    கருதாத வஞ்சனேனு மகிழோடு

கலையாக மங்கள்கோடி புகழ்சேவை தந்திவேளை
    கடையேனை நண்பினுள வருவாயே

அவியாசை கொண்டதேவர் பதியாவு மன்றுதீய
    வனலேவு வண்டர்மாள வயில்வீசி

யமராடி வென்றுமீளு மதிபாசு கந்தவாடை
    யலர்சூடு குன்றின்மாது மணவாளா

செவியூடு சந்தமோதே கிளிபாடல் கொண்டசீல
    செயவீர கந்தநாத குகவேளே

திருநாத னஞ்சமேறு முயர்மாது நண்பனூடு
    சிவபால தண்டபாணி முருகோனே.

ஸ்திரீபார்ட் K. S. அனந்தநாராயண அய்யர், ராஜபார்ட் K. S. செல்லப்பா அய்யர், V. S. மகாதேவய்யர், G. S. முனுசாமிநாயுடு, ஹிந்துஸ்தான் கவாய் K. M. தர்மலிங்கம்பிள்ளை, M.G. பயிரவ சுந்தரம் பிள்ளை, சங்கீதசரபம் G. N. சாமிநாத முதலியார், ஒரிஜனல் அரங்கசாமி நாயுடு, ஜேகன்மோகன குப்புசாமி முதலியார், கானமோகன T. A. இராஜாமணி அம்மாள் பார்ஸி P. வடிவாம்பாள் இவர்கள் நடத்தி வருகிற

ஹிந்துஸ்தான் பார்ஸி பதங்கள்.

1 ஸய்யாரே ஹமரேகு ஸய்யாரே ஹமரே
பியாரல காயுஜான் (ஸய்)
பியாரலகாயுஜான் ஸைஞலகாயுஜான் (ஸய்)
தேகத்ததில்ஸே சத்தியாங்குவகெ
தசபரஜோபன்கே ஜோரலகாயுஜான் (ஸய்)

---

2 பீதாம்பதபங்கஜ பிரணகதா
மேராறவஸியா ராஜகுமாரா (பீதா)
ஞானரதன்ஸே தன்கிஸோமா
தன்ஸோ பரசிங்கார் அரஹா
தன்ஸோ பரசிங்கார்
பிராணபயரஸே ரஞலங்கரஸே
பிராணபதி ஸேஞ (பீதா)

---

3 ஹா ஹா லட்ட கோலியான்
பல்மி லட்ட கோலியான்
டலியாமை ஸாண்டே
சலோரேஸையா மாண்டே
எத்திஸையா மாண்டே (ஹா)
ஹா ஹா லட்ட ஸௌடாக்கே
பல்மிலட்ட ஸௌடாக்கே
டலியாமை ஸாண்டே
ஸலோரே ஸையாமாண்டே (ஹா)
தேவி சுர மகாராணி

---

4 ஹாயிலோமை தோரிமந்திருவா
ஹசாதகே கேலத்தே
கெலிலாரி ஜோ வஹுவா (ஹா)

ஜிட்டியாம் டாரியாம்
சுந்தெநக்கே பாரியாம்
துங்கநீஜே ரங்கா
ஜிதே மோரி டாரியாம் (ஹா)

---

5 ஹாவோஹாவோ நைஜேமதுபத்துலாவே
நனுபாவேகியா தோரிபியாரேபியா-ஜி
மானேபினவோ பனபனபியாவோ
சஜனபனவே சஜனபனவோ(ஹாவோ)

அத்தபினஹைன கியாகரீன
பியாரேபதில்ஹைப அய்லியனவோ
கியகுதரபீச்சோலி யாபத்தாதேவா(ஹாவோ)

---

6 சுந்தரிபியாரிமைகோ நரியாலபேலி
நரியாலமேலிமைகோ நரியாலபேலி (சுந்)

சதுரஸபாலகோதும் பானுமேபனதும்
யேக்கதலாதேஹ கேர்தானுனேபடேலி (சுந்)

---

7 ப்யாரி புரோஜ் நாநிமஹா
நாரி ப்யாரி ப்யாரி ஷா
ஜாகியாரி நாரில்லா
ஜவ்வாபுதே
அரேகுலா அரேசோட
தம பீச்சாரா பன்கியாரா
குல்லஹ தீயான் உஸ--னெசிலாவ்
ஹக்கே மிலாலியா ஹய் ஹய் ஹய்
ஹக்கே மில்லாலியா ஹய்
மஜே எடானே உஜ்பஸ்தின்பர்
பீர் ஜோ கே கோ கூஜ்பனிதா
ஷயர் ஒயர் கொயர் ஹல் பத் தா
ஹ ஹ ஹ ஜோ தே கோ

---

8 ஆயேஸையா பஜீமைதோரிபையா
சதாவோனபே ா

பியா பியாரிகெ தில்மே ஜாவுமோரி
மைகும்பிரஹா க்கிமாறி-கியல்கட்டாரி

கட்டாரிமொரி ஸய்யா
கியாவ்மாமோரி ஸய்யா
அச்சாமோரி ஸய்யா
பியாரிதோரி ஸய்யா

சலுபலியாம்-பலுபலியாம்-பேகலியாம்-ஒஸய்யா (ஆயே)

சய்யாகே சய்யர்பியாரி சேனுலகிருங்கிசே
பன்கேதோ டனுபனுபாபி
மோக்க காகுல சோகாப்
சிசேலாய் தாருஸாய்
காபோலாய் லாகேலாம் (ஆயே)

---

9 ஆயமுஜேதர்தேஜி கர்னேசதாபா
மேராபியாராநஹி தியாராநஹி—கொபி
சாராநஹி ஹைறகுதாயா ஆயகொயி
சாராநஹி ஹைறகுதாயா—மெர
பியுாராநஹி தியாராநஹி

(தொகையறு)

பிகாமே ஆகமே பரியாதமே சைவன்
மினுலுமே கணவும்தர்ததில் ஹகர்வேசா
கணவாலா மேகபாமே ஸ்ரீஹரம் கருமடே அர்கம்

பதல் தேஹிகாகுல் சூல்தாஹால்
பயல்வோபதல்தேஹி
அதலபிதாஹுமிலா பூராசய்யாதுமிலா
தில்கவுஸ்தாதுமிலா சத்ருசல்லாதுமிலா

சாகிஸ்தேஹி தனமில் பிஸ்மில்
யாத்தே ஜாத்தே
ஆயசாலிப் ஜாலிம் ரஹம்னகாயா
திதயாராநஹி மெரபியாராநஹி (ஆய)

---

10 ஜாவோஜி ஜாவ்கிஸ்கி
தாண்கே புஸ்லானே ஹயே
கிஸ்கோபி கானே ஹயே
பாது மிலானே ஹாயே
காது மிலானே ஹாயே
அம் குபேலானே ஹாயே

ஜாவோஜி ஜால்ஜால் கிஸ்கி
தான்கே புஸ்லானே ஹயே (ஜா)

---

11 தாரியாரி சேலேனே நைஞேடலாயங்கதில்
தாரி யாரி சேலே ஸே
ஆருமேருவாலா ஜோபனமதுவாலா
ஆதமேரிசையா நைஞேலடாயங்கதில் (தா)

மூப்பபியாரி தும்போலே நைஞேலடாயங்கதில்
மூப்பபியாரி தும்போலோ
ஆருமேருவாலா ஜோபனுமதுவாலா
ஆதமேரிசையா நைஞேலடாயங்கதில் (தா)

---

12 திருச்சினஜாரிய மாலுங்கட்டாரியான்ஜான்
மைவாரி மாலுங்கட்டாரியான்ஜான்-அர
ஹாய் ஹாய் மாலுங்கட்டாரியான்ஜான்
மேரேபியாகா மேரேபியாகா
மேரேபியாகா தில்லாலஜாவோ—அர
ஆஷத்து கூர்த்தனஹாவோ (திரு)

அரே-கோரபதனுமான் ஜானகிருண்டலிஜான்
மைவாரி ஜானகிருண்டலிஜான்—அரே
ஹாய் ஹாய் ஜானகிருண்டலிஜான்
மேராஜீனேஸே மேராஜீனேஸே
மேராஜீனேஸே ஜோபன்னஜாவோ—அரே
ஆசத்துகூர்த் னஹாவோ (திரு)

---

13 ஆயரேஷம்கி ஷாடிதிலாவ்
ஷாடிதிலாவ் சோதிபனுவ்—அரே
தனியாஸே பனியாமே
ஐனிஸ காயுங்கே—அரே
கோடகிநாரி டோலிஸே மங்காயி
நாதோங்கி நாதிகுர்பான்—ஹாய் ஹாய்
நாதோங்கி நாதிகுர்பான்
அச்சாமோரிஜான் ஆராமோரிஜான் (ஆய)
எக் பார் தோ ஷார்
சாடி லாதோ ஸோ லிலாதோ

---

14 பஜாயிமேதில்பேல — காஞஸே
முஜஸங்கஸியோ — சகலாப காஞஸே (பஜா)

அச்சுபிரத்ன — கய
வக்தமுஜே — ஆதாயா
அய் சேர — தில்மேஹோ
பாணி உடா — லாலாயா
ஜெயரத — வாரிகொயி
ஆசக்கினி — ஜாத்தாயா
மில்வேகுஜூப — சையா—சஜங்குலாயா
லஹிமேரிமனத் — தாடலாஞஸே—முஜ
ஸங்கஸியோ — சகலாபஹாஞஸோ

---

15 ஸய்யமுஸே ஆத்தோங்கி — கங்கண்பஞத்தே
கங்கண் பஞத்தேஸய்யா — கோன்வலிபஞத்தே
கங்கண் பஞத்தேஸய்யா கோன்வலிபஞத்தேஸய்யா
கோன்வலி பஞத்தே (ஸய்யா)

தோரி மோரி — ஜானஸே
ஐகுல — ஜாணஸே
அரே — சலசலசல
தோரிமோரி — ஜாஞஸே
அரே — சலசலசல (ஸய்யா)

---

16 மனமயிலமிட்டே — தனதேசபட்டே
தோங்கபங்கஹா — லோட்டா
ஸபரோகபடுஸப — ரோகஸலோதி
அங்கபங்கஹோ — லோடா—முஜ
சாரஸமேமுஜ — தாரஸமே
ஆகபடே — லேமோட்டா
தன்ஸாய் — மன்ஸாய்—பெரு
ஆதவமே — லோட்டா—அரே
கந்ததாதமே — மௌலா—ஹர
பாரபன்னமே — கூலா—அர
பாரபங்கடு — கோலா
பூரணகு — கரஞ்சடாலே
ரங் — திகா லே
ரங் — சமா லே
தய் — கிசண்டி கிண்டி
சோட்டா — மைலோட்டா (மன)

17 கைலேசாசன தாஸே துவான்கோரே—தில்
ஹாவோ ஹமராசராகோரே (கை)

ஆத்தங் கங்கண்கலேபிச்சுவாலா
ஆவோ அமராசுரா தேதுவாலா-பலே
பைடோகி மூர்த்திபுராங்கோரே-தில்
லாவோ ஹமராசுரர்கோரே (கை)

---

18 சதுரநாராசிங்காரமை தோமை
டாரிநஹிடாரி வாரிவாரீரே (சது)

கியாவோ பஜாவோ
தேகோ சுனோவோ
வினுதரலினுகர ஹோரவெழுபார்
தாதரிகிடதக தகதரிகிடதக
தாதரிகிடதக தகதரிகிடதக
தகதளாங்கு தகதா
தகதளாங்கு தகதா
தகதளாங்கு தகதா
தத்தித்தோம் ததிங்கிணத்தோம் (சது)

---

19 பேகியவோல பவோலஜாவோ—தெர
லாகோபியார யிதருவா
சந்த்ரவதனியா மோகனரனியா
பியாரமோகனியா குலாலா—இஸ்கு
மேகல்மே ஹோரமைனதருவா—தர
லாகோயி யாரயிதருவா (பே)

---

20 சுனஸாகேப் மேரா தில்ஜல்ஜாயங்கே
சுனஸாகேப் மேரா தில்ஜல்ஜாயங்கே
ரகுங்கப்பியாரி மைனகஜார்மே—ஹை
பியாரிவாலர் சுப்—சுன (ஸா)

(தொகையறு)

குதர்ஜானஹோகிஷ்மத்மேஹாவி
நாயிநக ரே
அகர்கரதோபியா மல்தமல்தலஜீ
தாயிநக ரே
ரகுங்கப்பியாரி மைனரஜார்மேஹை
பியாரிவா லாசுப்-சுன (ஸா)

21 துங்காமைவாரிமை டலியாங்கியாங்-மூஜ
தேதேதேபியாரிமை டலியாங்கியாங்
ப்யாரிலென்ஸல் மை-வாரிஜானி
ஸென்ஸல் அரஸாயமுஸே
ஸென்ஸல் நே
கூலேமுகர்தே முஜுப்யாரி
ஸென்ஸ்ல்
அப்தமை காமகருங்கா
ஆயமுஸே நாாவநஹிஜா
சலசலசோல ரகருங்கா
மெரபதில் நாமஹிஜா-எஜி
அபபரபரபரயெஜிபரயெஜிபர அம்பாதும்பர (துங்)

---

22 ஐவிநாலேநானே சாவராதில
ஐடுகனஜாண ராஜணஹோயார்
கதில்பர் ஜாஜணஹோயார் (ஜவி)

தூபயிஸ்டி மேரிதீஷ்டி
கிஸ்டி மேநிபஹாருவா
மைன க்காரி
தனே பிக்சாரி
ஜாவுவாரி ராஜண (ஜவி)

---

23 தஸ்குமாரேத்தும் ரெருவாணகேரலாயுரே
தஸ்குமாரேது! ரெவாண
கேரலாயு-கேரலாயு-கேரலாயு (தஸ்)

கச்சகச்சசாவல்வே கிச்சடிபணயி
கானவாலேராஜா கிலானேவானேராணி (தஸ்)

பக்கபக்க பாணேமே
தடியாம்ப ணயி
கானேவாலே ராஜாகிலானேவாலேராணி (தஸ்)

---

24 தும்பினமோரி கௌனகபரல
சாவரியாகிர தார்ரே
அவ்ரணஒப் பிரமோ
அவ்ரபராஜா உத்தசரணதியகரி
மோரமகுட பீதாம்பரஜோபே
குண்டலகீ ஸபிதியாரா

எத்தோகுல வத்தமதுராநகரி
ஜமுனாசேதிந் திரதேவவாலா
சாவரியாகிர தாரிரே

---

25 சாவரியாமோரி சங்கரங்கமே
அய்சக ளோரீமாஞ்
அடாமங்காயா அஜிவங்காயா
அபிரமங்காயா பங்
கோடதாடஹே மாராலேலேபேட்டே
ஆலம்வாலேபங் பஜானேமாலேபங்
அரபங் பங்கங் (சர்வே)

---

26 ஆயாங்கரோஹி தாத்தாமோரி
ஜான்கபீர் கபீர்
கிக்யேகமாரி தில்குஜோ அகு
மான்கபீர் கபீர் (ஆ)
பூசேஷபேனு ஷானுமேரா
கார்கபா வீங்கே
இந்துபனங்கே ஆவுரேமூலல்
மான்கபீர் கபீர் (ஆ)
பொதாஹதில்பே தேகயோஜா
ஜைவானி பன்மே
சூரதிஹாதபியாரி அரதில்குபேரராரி
ஜான்ஜாதிஸே அபாரேராஜா
ஜைவானி பன்மே (ஆ)
மேரீகலீஸேஹரானு முஞ்சபீஸ்கடுனசதான
காகுலியேபிங்டோ ங்கஹிரானுன்ஹிஜாத்தா (ஆ)

---

27 ஜட்டுபிட்டு கைஸேமிலும்
மில ஜா னீ ஸே மில ஜா னீ ஸே
மில ஜானி லாஜானி—அரே
தில்லகிகோ தில்குபாலே பேடே யான்காறே
தன மனு ஜான்
சுப குரு பான
சுந் தர ஷான்—அரே (ஜட்டு)

முற்றுப்பெற்றது.

V. M. Amirtha Sanjeevi

TOOTHPOWDER.

உலகத்தில்நற்கியாத்பெற்றதந்த குணைந்த,

V. M. அமிர்த சஞ்சீவி

பற்பொடி.

☞ ஐயா! அநேகர் விருப்பத்தின்படி யாவரும் சுகத்தை அடையும் பொருட்டு அருமையான அநேக மருந்துகள், கல்நார், சீனிக்கார பற்பம் அரபொடிசெந்தூரம் அநேகமருந்துகள்சேர்த்துச் செய்திருக்கிறஇப்பற்பொடியை சொற்ப விலைக்குக் கொடுக்கின்றேன்.

Trade Mark.

இந்தப்பற்பொடியின் குணங்களாவன-

மேகரோகத்தினாலும், சீதளரோகத்தினாலும், அல்லது பதின் மூன்றுவித ஜன்னிரோகத்தினாலும், இன்னும் மற்ற எவ்விதத்தினாலும், வந்த பல்நோய்கள் எவ்வளவு கடூரமாயிருந்தாலும், முதல் நாள்துலக்கும்போதே பற்பொடியின் சாமர்த்தியத்தைப் பார்த்து 2, 3 தினத்தில் பூராக்குணமடையலா மென்றெண்ணி, இப்பவுடரினால் பல்துலக்க வாசனையாகவும், பல்வலி, பல்கூச்சம், பல்லசைதல் பல்லரணை, பல்பூச்சி, பல்வெடித்தல், பல்லீரல், தேய்வு, இகரிலிரத்தம் வருதல், சலம் வருதல், வாய்ப்புண், வாய்நாற்றம், வாய்கொன்னல், முதலான தந்தரோகங்கள் யாவற்றையும உடனே குணமாகும். சிருவர், மாதர், ஆடவர், வயோதிகர் யாவரும் இதைத் தினந்தோறும் உபயோகப்படுத்திவர ஆயுள்வரை பல்லைச்சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது எக்காலத்தும் உபயோகிக்கலாம். பல் கருக்காது இதனால் வேறுவித குற்றங்கள் உண்டாகாது. பாடகர்களுக்குச் சாரீரமுஞ் சுகமாக்கும். வாங்கி யனுபவித்துப் பாருங்கள். குணத்தை யடைவீர்கள்.

சொற்ப விலை டப்பா 1-க்கு அணா 0-2-6.

வேண்டியவர்கள் ☞ அரை டஜனுக்குக் குறையாமல் எழுதினால் அனுப்பக்கூடும்.வீ பி. சார்ஜ் பிரத்தியேகம்.

எமது விலாசம்:

☞ V. முத்திருளாண்டி பிள்ளை,

தாசில்தார் பள்ளிவாசல் தெரு, மதுரை.